**செ.வெ.எண்-14** **நாள்-10.08.2021**

# அரியலூர் மாவட்டம்
# கொரோனா தடுப்பு மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் சுகாதாரத்துறையின் சார்பில் வாலாஜாநகரம் ஊராட்சியில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளையும், ஜெயங்கொண்டம் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **திரு.மா.சுப்பிரமணியன்** அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் ஆகியோர்கள் இன்று (10.08.2021) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், கொரோனா தடுப்பு மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **திரு.மா.சுப்பிரமணியன்** அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** அவர்கள் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் (தேசிய நலக்குழுமம்) **டாக்டர்.தரேஸ் அஹமது, இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு.கு.சின்னப்பா** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.க.சொ.க.கண்ணன்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்வின்போது, செய்தியாளர்களிடம் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி சுகாதாரத்துறையில் எண்ணற்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். சுகாதாரத்துறையில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசு மருத்துவமனைகளின் மூலம் சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொதுமக்களை காத்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட போர்கால நடவடிக்கைகளால் தற்போது கொரோனா பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. மேலும், மருத்துவ வல்லுநர்களால் தெரிவிக்கப்படும் கொரோனா 3ஆம் அலையிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திடும் வகையில் மருத்துவ கட்டமைப்பு வசதிகள் அனைத்து மருத்துவமனைகளிலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மக்களின் நலவாழ்வில் அக்கறைக்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நபர்களின் இல்லங்களுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் வகையில் மக்களைத்தேடி மருத்துவம் என்ற சிறப்பு வாய்ந்த திட்டத்தினை தொடங்கி வைத்து, நோயாளிகளின் இல்லங்களுக்கே சென்று அவர்களுக்கு தேவைப்படும் பிசியோதெரபி உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகளுடன் மருந்து மாத்திரைகளும் அளிக்கப்பட்டு வருகின்றனர். மேலும், நமது மாவட்டத்தில் மேல் சிகிச்சைக்காக அருகிலுள்ள மாவட்டங்களான திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களுக்கு சென்று மருத்துவ பரிசோதனை மற்றும் அனைத்து வகையான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நமது மாவட்டத்திலே சிறப்பு வாய்ந்த மருத்துவக்கல்லூரி மூலம் அவசர சிகிச்சைகளுக்கோ, மேல் சிகிச்சைகளுக்கோ வெளி மாவட்டங்களுக்கு செல்லாமல் நம் மாவட்டத்திலே மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக்கொள்ளலாம் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **திரு.மா.சுப்பிரமணியன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், வாலாஜாநகரத்தில் பெரு நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதியின் சார்பில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் துவக்கி வைத்து, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு மருந்து மாத்திரைகளை அவர்களின் இல்லங்களுக்கு சென்று வழங்கினார்கள். மேலும், இத்திட்டத்தின்கீழ் பிசியோ தெரபி சிகிச்சை அளிப்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.21,750/- மதிப்பீட்டில் 2 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டி மற்றும் 1 நபருக்கு மடக்கு சக்கர நாற்காலிகளையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஜெயங்கொண்டத்தில் பொதுப்பணித்துறை மருத்துவப்பணிகள் சார்பில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப்பிரிவு கட்டிட கட்டுமானப்பணிகளையும், செந்துறை அரசு மருத்துவமனையில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும், நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள், பொதுமக்கள் நலன் கருதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களை விரைவாக நிறைவேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தினார்கள்.

மேலும், அரியலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நிமிடத்திற்கு 1000 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் உற்பத்தி மையத்தினையும், எல் & டி நிறுவனத்தின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆக்சிஜன் சேமிப்பு கிடங்கினையும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற கொரோனா தடுப்பு மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில், அரியலூர் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்தும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிறப்பு சிகிச்சைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கொரோனா 3ஆம் அலையால் பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்சிஜன் உற்பத்தி திறன் குறித்தும், நாள்தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா பரிசோதனை எண்ணிக்கைகள் குறித்தும், விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி பொதுமக்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில், பெரு நிறுவனங்களின் சமூக பாதுகாப்பு நிதியிலிருந்து கொரோனா தொற்று நிவாரணப் பணிகளுக்காக நிவாரண நிதி அளித்த நிறுவனங்களை பாராட்டி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் **திரு.மா.சுப்பிரமணியன்** அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் **திரு.எஸ்.எஸ்.சிவசங்கர்** ஆகியோர்கள் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.பெரோஸ்கான் அப்துல்லா, இயக்குநர் (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை) மரு.டி.எஸ்.செல்வவிநாயகம், இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.எஸ்.குருநாதன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எச்.முத்துகிருஷ்ணன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.ஜி.திருமால், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.எம்.கீதாராணி, மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர் (பொ.ப.து) ஆயிரத்தரசு ராஜசேகரன், செயற்பொறியாளர் (பொ.ப.து) மணிவண்ணன் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**